# IN THE COURT OF DISTRICT MUNSIF, PALACODE

| | | |
|---|---|---|
| **OS No. 57/2018** | : | **Date :** 10.08.2026 |
| Deposition of Witness for | : DW-1 | |
| Name | : **சத்தியா - முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், பாலக்கோடு.** | |
| Father/Husband Name | : **நாராயணசாமி** | |
| Village | : **பாலக்கோடு** | |
| Taluk | : **பாலக்கோடு** | |
| Age | : 36 | |

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**குறுக்கு விசாரணை**

1. நான் பாலக்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எனது பணி கிராமங்களுக்கு செல்வது அல்ல, அலுவலகத்தில் கோப்புகள் தொடர்பாக நிர்வாக பணியை செய்து வருகிறேன். தாவா சர்வே எண்.111/1B ஆகும், அதன் பரப்பளவு ( 0.40.5 ஹெக்டர் ) ஏக்கர் படி ஒரு ஏக்கர் ஆகும். மேற்படி தாவா சொத்தை பொறுத்து வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாவா தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு மற்றும் பின்பும் தாவா சொத்தை பொறுத்து வாதிகளும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே சம்மந்தப்பட்ட கோப்புகள் எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் குறிப்பிட்டு கூற இயலாது, அலுவலகத்தில் தேடி பார்த்தால் தான் தெரியும். நான் முதல் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு தாவா சொத்து தொடர்பாக தாவா தாக்கல் செய்வதற்கு முன்பும், பின்பும் எனது அலுவலகத்தில் உள்ள

கோப்புகளை நான் பார்த்தேனா என்றால் அந்த கோப்புகளை நான் பார்த்துள்ளேன். வாதிகள் தாவா சொத்தை பொறுத்து என்ன பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தாவா சொத்தில் அவர்களது சுவாதீனத்தை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் உள்ள விவரமும், பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் கண்ட விவரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. பூமிதான சட்டப்படி பூமிதான நிலம் என்றால் என்ன என்று எனக்கு தெரியும். பூமிதான இயக்கமானது ஆச்சரிய வினோபவா அவர்களால் தொடங்கப்பட்டு அதிகமாக நிலம் வைத்திருப்பவர்கள் அவர்களிடம் உள்ள கூடுதல்நிலத்தை வழங்குவதன் பேரில் அந்த நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு விநியோக பத்திரம் மூலம் விவசாயம் செய்ய வேண்டி தானமாக வழங்குவது தான் அந்த சட்டத்தின் நோக்கம் என்றால் சரிதான். தாவா சொத்து 1ம் வாதியின் தகப்பனார் நாகராஜன் என்பவருக்கு பூமிதான இயக்க வாரியத்தால் மேற்படி நாகராஜன் இலவசமாக விவசாயம் செய்ய வேண்டி 28.04.1965ல் அவருக்கு தானமாக வழங்கப்பட்டது என்றால் தேதி குறிப்பிட்டு தெரியவில்லை, மேற்படி நாகராஜனுக்கு தாவா சொத்து பூமிதான இயக்க வாரியத்தால் தானமாக வழங்கப்பட்டது தான். மேற்படி தேதியில் இருந்து இறக்கும் வரை 1ம் வாதியின் தகப்பனார் நாகராஜன் தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் மேற்படி நாகராஜனின் அனுபவ பாத்தியத்தின் படி என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி மேற்படி நாகராஜன் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளதாக கண்டு 1ம் பிரதிவாதியால் பட்டா பாஸ் புக் வழங்கப்பட்டுள்ளது

என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு வா.சா.ஆ.1 ஆவணம் தனது அலுவலகத்தில் உள்ள அலுவலக கோப்புகளை கண்டு தான் அதன் உண்மை தன்மை குறித்து சரியாக கூற இயலும் என்று கூறுகிறார். வா.சா.ஆ.1 ஆவணம் எனது அலுவலகத்தில் வழங்கப்பட்ட ஆவணம் என்று எனக்கு நன்கு தெரியும் என்றாலும், தற்போது கோப்புகளை பார்த்தால் கூற முடியும் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு தாவா விவரங்களும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்த அதன் உண்மை தன்மை பொறுத்து நான் எனது அலுவலகத்தில் கோப்புகளை பரிசீலனை செய்தேனா என்றால் இல்லை.

3. வா.சா.ஆ.1 ன் படி 1ம் வாதியின் தகப்பனார் நாகராஜன் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வந்து 23.04.2012ம் தேதியில் நாகராஜன் இறக்கும் வரை அவர் தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி நாகராஜனின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான வாதிகள் தாவா சொத்தில் வரையறுக்கப்பட்ட உரிமையான அனுபவ பாத்தியப்படி நாளது வரை சுவாதீன அனுபவித்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வேறு யார் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் மாதையன் என்பவர் தாவா சொத்தில் விவசாயம் செய்து வருகிறார். நான் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து பணி உயர்வின் படி முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். அடங்கல் ஆவணம் என்பது அனுபவத்திற்கான ஆவணம் என்றால் சரிதான். அடங்கல் கணக்கில் நான் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றிய போது சொத்திடம் சென்று

பட்டாதாரரின் பெயர், அந்த நிலத்தை யார் பயிர் செய்வார்கள், அதன் பரப்பளவு மற்றும் என்ன பயிர் செய்யப்பட்டது என்ற விவரங்களை பதிவு செய்வோம் என்றால் பட்டாதாரரின் பெயர் மற்றும் என்ன பயிர் செய்யப்பட்டது என்று மட்டும் தான் பதிவு செய்வோம், யார் பயிர் செய்துள்ளார்கள் என்று குறிப்பிட்டு பதிவு செய்வதில்லை. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.4 ஆவணத்தில் பயிர் சாகுபடி செய்பவர்களின் தகவலை அடங்கல் கணக்கில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டாதாரர் விவசாயம் செய்தால் மேற்படி சாகுபடி செய்பவர்கள் குறித்து பதிவு செய்யும் அட்டவணையில் சொந்த சாகுபடி (சொ.சா) என்று குறிப்பிடுவோம் என்றால் சரிதான்.

4. நிலத்தின் பட்டாதாரர் அந்த நிலத்தை குத்தகைக்கு விட்டிருந்தால் குத்தகை தாரர் விவசாயம் செய்தால் அந்த விவரங்களை குத்தகை சாகுபடி (கு.சா) என்று குறிப்பிடுவோம் என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணத்தில் மேற்படி தாவா சொத்தை சொந்த சாகுபடியா அல்லது குத்தகை சாகுபடியா என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணத்தில் தாவா சொத்தில் தீவனபயிர் 20 ares நிலத்தில் பயிர் செய்துள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணத்தின் படி தாவா சொத்தில் யார் தீவனபயிர் வைத்தார்கள் என்று குறிப்பிடவில்லை என்றாலும், அதுபற்றி எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். தாவா சொத்தில் மாதையன் என்பவர் சாகுபடி செய்ததாக நான் விசாரித்து தெரிந்து கொண்டதாக கூறியுள்ளது தவறு என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.4 ஆவணம் 1424 பசலி ஆண்டிற்கானதாகும், அது 2015ம் ஆண்டிற்கானதாகும். நான்

எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து வண்டிவழிபாதையாக தான் உள்ளது, யாருடைய அனுபவத்திலும் இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக அடங்கல் கணக்கில் சொத்தில் வண்டிவழிபாதை, கிணறு போன்ற அமைப்புகள் இருந்தால் அதற்கான அட்டவணையில் குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.4 ஆவணத்தில் தாவா சொத்தில் வண்டிவழிபாதை இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளதுபோல் தாவா சொத்தில் வண்டிவழிபாதை இருந்திருந்தால் பி.சா.ஆ.4 ஆவணத்தில் எதனால் குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவிலலை.

5. தாவா ஸ்தலத்தில் உண்மையில் நான் சொல்லுவதுபோல் வண்டிவழிபாதை இருந்திந்தால் பி.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடிருப்பேன் என்றாலும், அவ்வாறு இல்லாத காரணத்தினால் தான் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. சாட்சி பின்னிட்டு தாவா சொத்தில் வண்டிவழிபாதை இருந்ததற்கான கோப்பு அலுவலகத்தில் உள்ளது. வண்டிவழிபாதை இருந்ததற்கான கோப்பு எங்களது அலுவலகத்தில் இல்லை என்றும், தாவா சொத்தில் வண்டிவழிபாதை அமைப்பதற்காக சென்னை பூமிதான இயக்க வாரியத்தில் நிலுவையில் உள்ளதாக சாட்சி கூறுகிறார். தாவா சொத்தில் வண்டிவழிபாதை அமைப்பது தொடர்பாக சென்னை பூமிதான இயக்கத்திற்கு யார் மனு கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி மனுவின் பேரில் உத்தரவு எதுவும் ஏற்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் சொல்லுவதுதவறு என்றாலும், தாவா சொத்தில் வண்டிபாதை அமைக்க சென்னை பூமிதான வாரியத்திற்கு

எந்தவிதமான மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அதன் பேரில் எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. 07.01.2013ம் தேதியில் 1ம் வாதியின் தகப்பனார் நாகராஜன் என்பவர் ஒரு சட்ட அறிவிப்பு அவரது வழக்கறிஞர் மூலம் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பி உள்ளார் என்றாலும், அதனை அப்போது இருந்த வட்டாட்சியர் கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டார் என்றாலும் சரியல்ல, 2012ல் 1ம் வாதியின் தகப்பனார் நாகராஜன் இறந்துவிட்டார். 09.11.2015ம் தேதியில் 1ம் பிரதிவாதி ஒரு அழைப்பாணையை 1ம் வாதிக்கு வழங்கியுள்ளார் என்றால் சரிதான். **09.11.2015ம் தேதியிட்ட அழைப்பாணை – நகல் – வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. வா.சா.ஆ.5 ஆவணமானது 1ம் பிரதிவாதியால் 1ம் வாதிக்கு தாவா சொத்தான பூமிதான நிலத்தில் ஆக்கிரமிப்பை அகற்றி பொதுவழி வண்டிபாதை அமைத்தல் தொடர்பாக விசாரணைக்கு ஆஜராக அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அழைப்பாணையின் படி 09.11.2015ம் தேதியில் தாவா சொத்தில் வண்டிபாதை இல்லை என்றால் சரியல்ல, ஆவணங்களின் படி இல்லை. மேற்படி தேதியில் தாவா சொத்தில் வண்டிபாதை இருந்ததா என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு வண்டிபாதை அமைக்க அதிகாரம் இல்லை என்று 09.11.2015ம் தேதியிலேயே 1ம் வாதி சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. நான் சொல்லுவது தவறு என்றாலும், வழக்கிற்காக அதுபற்றி எனக்கு தெரியாது என்று

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 13.12.2017ம் தேதியில் 1ம் வாதிக்கு 1ம் பிரதிவாதி அழைப்பாணை அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். **13.12.2017ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி 1ம் வாதிக்கு அனுப்பிய அழைப்பாணை – சார்வு நகல் – வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வா.சா.ஆ.6 ஆவணத்தில் தாவா சொத்தில் வண்டிபாதை பிரச்சனை தொடர்பாக நேரில் ஆஜராக சொல்லி அழைப்பாணை வந்துள்ளது என்றால் சரிதான். அதற்கு 20.12.2018ம் தேதியில் 1ம் வாதி 1ம் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. தாவா நிலுவையில் இருந்த சமயத்தில் 14.02.2023ம் தேதியில் 1ம் வாதிக்கு தாவா சொத்தில் உள்ள வழிபாதை ஏற்படுத்துதல் தொடர்பாக 1ம் பிரதிவாதி அழைப்பாணை அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். **14.02.2023ம் தேதியிட்ட அழைப்பாணை – சார்வு நகல் – வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அழைப்பாணைக்கு 1ம் வாதி 21.02.2023ம் தேதியில் சட்ட அறிவிப்பு அனுப்பியதை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை என்றால் சரிதான். **21.02.2023ம் தேதியில் சட்ட அறிவிப்பு அனுப்பியதை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை – அசல் – வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பூமிதான சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் 1ம் பிரதிவாதி மேற்படி அழைப்பாணைகளை 1ம் வாதிக்கு அனுப்பியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பூமிதான சட்டத்தில் எந்த பிரிவு மற்றும் விதிகளின் படி

1ம் பிரதிவாதிக்கு உள்ள அதிகாரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து பூமிதான இயத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றாலும் சரிதான். பி.சா.ஆ.2ன் படி தாவா சொத்து ரயத்துவரி நிலம் என்றாலும், அரசு நிலம் அல்ல என்றாலும் சரிதான். தாவா சொத்தில் வண்டிபாதை அமைப்பதற்கு பூமிதான இயக்க வாரியத்தில் இருந்து 1ம் பிரதிவாதிக்கு உத்தரவு வந்ததா என்றால் பூமிதான இயக்க வாரியத்தில் இருந்து மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவு வந்ததன் பேரில் மாவட்ட ஆட்சியர் 1ம் பிரதிவாதிக்கு மேற்படி அதிகாரம் வழங்கியுள்ளார். மேற்படி பூமிதான இயக்க வாரியத்தில் இருந்து 2ம் பிரதிவாதிக்கு உத்தரவு வந்ததற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும், குறுக்கு விசாரணை செய்வதற்காக வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

ENIYA

Digitally signed by ENIYA
Date: 2026.08.10 17:06:18 +0530

District Munsif,
Palacode.